தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

கொடுமுடியார் உரை

கொடுமுடி சண்முகப் பிரகதம்

கொடுமுடியார் ஆய்வுக் கழகம்

11–பி, இரண்டாம் நிழற்சாலை,
இந்திரா நகர், சென்னை – 600 020.
தொலைபேசி : 044–4423419
வெளியீடு : 1 / 2000

நன்றி

எங்களைத் தமிழ்வழி ஆற்றுப்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு, இந்து சமய அறநிலையத் துறை

அமைச்சர் மாண்புமிகு

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** அவர்கட்கும்,

இந்நூலின் கருத்துகள் உருவாக ஆதாரமாக இருந்த முந்தய கருத்தாளர் அனைவருக்கும் எங்கள் இனிய நன்றி.

நூலாசிரியர் முன்னுரை

சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன்படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே

படிப்பதற்குச் சற்றே தடுமாறுகிறீர்களா? நீங்கள் மெத்தப்படித்த மேதை என்பதில் அய்யமில்லை. படிக்கும் பழக்கம் குறைவாக உள்ளவர்களும், பள்ளி மாணவர்களும் எளிதில் படித்துவிடுவர்.

இதில் புதிதாக ஏதுமில்லை. ஜுரம், ஜூலை, என்பது போல சுரம், சூலை, திருக்குறள் என்றவாறு அச்சிட்டுள்ளோம். முதல் வகுப்பிலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் சிலபகுதிகளுக்கு எழுதப்பட்ட உரை. அவ்வக்காலத் தமிழ் எழுத்து வடிவங்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

இவை கொடுமுடியாரின் ஆய்வாகவும் தோன்றலாம்; ஆசையாகவும் இருக்கலாம். இது ஒரு நிலை; அவ்வளவே.

1. நூன்மரபு

1.1. எழுத்துகளின் வகை

1.1.1. எழுத்தெனப்படுப
அகர முதல
னகர இறுவாய் முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே.

அகரம் முதல் னகரம் வரை முதன்மை எழுத்துகள் 30. இவற்றைச் சார்ந்துவரும் எழுத்துகள் மூன்று.

அ	இ	உ	எ	ஒ	ஐ
ஆ	ஈ	ஊ	ஏ	ஓ	ஔ
க	ச	ட	த	ப	ற
ய	ர	ல	வ	ழ	ள
ங	ஞ	ண	ந	ம	ன

வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் இடையில் இடையினம் வரும்போது னகரம் இறுதியில் வருவது காண்க. தற்போதைய நெடுங்கணக்கில் இறுதியில் னகரம் வருவது முறையன்று.

1.1.2. அவை தாம்,
குற்றியலிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன.

ஆய்தம் தற்போது மூன்று புள்ளியாக எழுதப்படுகிறது. முன்பு அவ்வாறில்லை. ஆய்தம் தனிப்புள்ளியாக எழுதப்பட்டது. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் அவ்வாறே தனிப்புள்ளிகளாக எழுதப்பட்டன. இவை சார்பெழுத்துகள் எனப்படும்.

1.2. மாத்திரை

1.2.3. அவற்றுள்
அ இ உ எ ஒ என்னும்
அப்பால் ஐந்தும்
ஓரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப.

இங்கு அளவு என்றது கண்இமைக்கும் நேரத்தை. இதனை மாத்திரை என்போம். அ இ உ எ ஒ ஆகியவை குற்றெழுத்துகள் எனப்படும். இவை ஒரு மாத்திரை அளவு ஒலிப்பவை.

1.2.4. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் 7 எழுத்துகளும் நெட்டெழுத்து எனப்படும். இவற்றை இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கவேண்டும்.

5 குறிலுக்கு ஏற்ப 5 நெடில்தானெ இருக்கவேண்டும்?
7 நெடில் எவ்வாறு வந்தது?
1.5.25 போலி இலக்கணத்தின் பின்னுள்ள குறிப்பு காண்க.

1.2.5. மூவளவு இசைத்தல் ஓரெழுத்தின்றே.
எந்த ஒரு எழுத்தும் மூன்று மாத்திரை ஒலிப்பதில்லை.

1.2.6. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி
எழூஉதல் என்மனார் புலவர்.

மூன்று மாத்திரை ஒலிக்கவேண்டியிருந்தால் இனஎழுத்து ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆஅ, ஈஇ, ஏஎ என்றவாறு எழுதலாம்.

1.2.7. கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை.
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு.

கண் இமைக்கும் நேரம் மாத்திரை எனப்படும். இது அறிவியலார் முடிபு.

1.3. எண்

1.3.8. ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ ஐ ஔ என்றவாறு உயிரெழுத்துகள்12. இறுதி எழுத்து ஔகாரம்.

1.3.9 னகர இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.

க ச ட த ப ற, ய ர ல வ ழ ள, ங ஞ ண ந ம ன என்றவாறு மெய் எழுத்துகள் 18. இறுதி எழுத்து னகரம். வல்லினம் மெல்லினம் இவற்றின் இடையே இடையினத்தை வைத்தால் னகரம் இறுதியில் வந்துவிடும். தற்போதுள்ள நெடுங்கணக்கில் ழளறன ஆகிய நான்கு எழுத்துகள் இறுதியில் வருகின்றன. அது சரியன்று. கஙசஞடணதநபமறன யரலவழள என்று இருக்க வேண்டும்.

1.3.10.மெய்யோடியையினும் உயிரியல் திரியா.

உயிரெழுத்துகள் மெய்யினுள் புகுந்து உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன. உயிர்மெய் எழுத்து அதிலுள்ள உயிர் எழுத்து ஒலி அளவே ஒலிக்கும். மெய் அரை, உயிர் ஒன்று ஆக ஒன்றரை மாத்திரை ஒலியா. உயிரின் அளவான ஒரு மாத்திரை அளவே ஒலிக்கும்.

1.3.11. மெய்யின் அளபே அரையென மொழிப

மெய் எழுத்து தனியாக வரும்போது அரை மாத்திரை அளவே ஒலிக்கும்.

1.3.12.அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.

சார்பெழுத்துகளான குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் மெய் எழுத்தைப்போன்றே அரை மாத்திரை அளவே ஒலிக்கும்.

1.3.13.அரை அளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங்காலை.

மகரம் இசைஒலி தருங்காலங்களில் தன்இயல்பான அரை மாத்திரை அளவிலும் பாதியாகக் கால் மாத்திரை ஒலிக்கும்.

1.4. வடிவம்

1.4.14. உட்பெறுபுள்ளி உறுவாகும்மே.

ப எழுத்தின் உள்ளே சிறிய புள்ளி அல்லது சிறு கோடு சேர்ந்து ம எழுத்து தோன்றுகின்றது.



1.4.15. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.

மெய் எழுத்துகள் புள்ளியோடு இருக்கும், தொல்காப்பியர் *காலத்திற்குச் சற்று முன்னதாகத்தான் இம்முறை அறிமுகமாகின்றது* மேல் விவரம் எழுத்து வரலாற்றுக் குறிப்பில் காண்க.

1.4.16. எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.

அ ஆ இ ஈ உ ஊ ஆகியவை குறிலும் நெடிலுமாக இணையா உள்ளன. அதன் பின்னர் ஏ ஓ ஆகிய இரு எழுத்துகளும் எழுதப்பட்டுப் இவ்வெழுத்துகளின் உள்ளே புள்ளிவைத்தால் அவை எ ஒ ஆகும். இந் வழக்கம் தொல்காப்பியத்திற்குப் பொருத்தமாக இல்லை. மேல் விவரம் 1.5.2 போலி இலக்கணத்திற்குப் பின்னர் காண்க.

1.4.17. புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே.

மெய் எழுத்தின் மேலுள்ள புள்ளியை நீக்கிவிட்டால் அது அகர ஏறிய உயிர் ஆகும்.

அகரம் தவிர்த்த பிற உயிர் ஏறும்போது அவை வடிவம் மாறிவிடு

க் – தலையில் புள்ளி உள்ள மெய்.

க – தலைப்புள்ளி நீங்கிய இயற்கை வடிவம்

கா– வடிவம் மாறிவிடுகிறது

கி கீ கு கூ கெ கே கொ கோ கை கௌ போன்றவற்றில் வடிவ மாறியுள்ளமை காண்க.

ꦱ꧀ ꦲ꧀ …

1.4.18. மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே.

மெய் முன்னதாகவும் உயிர் பின்னதாகவும் கூடி உயிர்மெய் ஒலிக்கும்.

1.4.19. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.

கசட தபற ஆகிய ஆறு எழுத்துகளும் வல்லினம் எனப்படும்.

1.4.20. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.

ங ஞ ண ந ம ன ஆகிய ஆறு எழுத்துகளும் மெல்லினம் எனப்படும்.

1.4.21. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.

ய ர ல வ ழ ள ஆகிய ஆறு எழுத்துகளும் இடையினம் எனப்படும். வல்லினம் இடையினம் மெல்லினம் என்று இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் னகரம் இறுதியில் வரும்.

2. மொழி மரபு

2.1.5. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

ஆய்தப் புள்ளி ஒரே புள்ளியாக இருந்தது. குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அவ்வாறு ஒரே புள்ளியாக இருந்தன.

2.5.போலி

2.5.21. அகர இகரம் ஐகாரம் ஆகும்.

அ + இ = ஐ. ஐகாரம் தனி எழுத்து அன்று. இரண்டு உயிர் சேர்ந்த கூட்டெழுத்து ஆகும்.

2.5.22. அகர உகரம் ஔகாரம் ஆகும்.

அ + உ = ஔ. ஔகாரமும் கூட்டெழுத்தே.

2.5.23. அகரத்திம்பர் யகரப் புள்ளியும்.

ஐ என் நெடுஞ் சினை மெய்பெறத் தோன்றும்.

ஐ எழுத்தை அய் என்றவாறும் எழுதலாம்.

இந்த நூற்பாவில் ஐ எழுத்தை அய் என எழுதலாம் என்று கூறினாரேயன்றி ஔ எழுத்தை அவ் என எழுதலாம் என்று குறிப்பிடவில்லை. திருக்குறளில் ஔ வரவேண்டிய இடங்களில் அவ் என்ற பழைய வடிவமே வருகிறது. அவ்விய நெஞ்சத்தான் என்றும் தவ்வையை என்றும் அவ்வித்து என்றும் கவ்வை என்பது திருக்குறளில் காணப்படுகிறது. அதேவேளையில் எல்லா அய்கார எழுத்துகளும் ஐகாரமாக மாற்றப்பட்டுவிட்டன. **கய்வேல்** என்பது **கைவேல் களிற்றோடு போக** என்று திருத்தப்படுகின்றது.

1.5.24. ஓரளபாகும் இடனுமா றுண்டே

தேறுங்காலை மொழிவயி னான.

பல இடங்களில் ஐ ஔ எழுத்துகள் இரண்டு மாத்திரைக்குப் பதிலாக ஒரு மாத்திரை அளவே ஒலிப்பதைக் காணலாம். நிலையம், திரையன் மலையாளம் போன்ற சொற்கள் அவ்வாறானவை.

லை = ல + ய் நிலையம் → நிலய்+அம் = நிலயம்.

ரை = ர + ய் திரையன் → திரய்+அம் = திரயன்.

1.5.25. இகரமும் யகரமும் இறுதி விரவும்.

சொல்லின் இறுதியில் ஒலி நீட்டிப்பிற்காக இ, ய் ஆகிய இரண்டு எழுத்துகளும் வருவதுண்டு. உ, வ் பற்றிக் கூறாதது நினைவு கொள்ளத்தக்கது.

ஐகாரம் ஔகாரம் பற்றிய விளக்கம்

போலி இலக்கணம் முழுவதும் அய்காரம் அவ்காரம் தொடர்பானவை. தமிழ் நெடுங்கணக்கில் ஐ ஔ எழுத்துகளின் வைப்பு இடம் தொல்காப்பியத்திற்கே பொருத்தமாக இல்லை. தற்போது ஐ ஒன்பதாம் இடத்திலும் ஔ பதினோராம் இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அ+இ =ஐ எனும்போது ஈகாரத்தின் பின் ஐந்தாம் இடத்திலல்லவா ஐ அமைந்திருக்க வேண்டும். அ+உ=ஔ என்பதால் ஊகாரத்தின் பின் ஏழாம் இடத்தில் வைத்திருக்க வேண்டும். அ ஆ இ ஈ ஐ உ ஊ ஔ எ ஏ ஒ ஓ என்றவாறு

இருந்திருக்க வேண்டும். அவ்வாறில்லை. சங்கத (சமஸ்கிருதம்) இலக்கணத்தைச் சற்றே நோக்குவோம். அதில் குணசந்தி வருமாறு.

அகரம் +இகரம் = ஏகாரம். அகரம் + ஏகாரம் = ஐகாரம்.

அகரம்+ உகரம் = ஒகாரம் அகரம் + ஒகாரம்= ஔகாரம்

ஐகாரம் ஏகாரத்தின் பின் அமைந்ததும், ஔகாரம் ஒகாரத்தின் பின் அமைந்ததும் சங்கதச் சார்பானது. ஐகாரம், ஔகாரம் தமிழில் நெடுங்காலம் புழங்கி வந்துவிட்டது. அதனால் தமிழாகிப் போய்விட்டன. இவை இரண்டும் தனி எழுத்துகள் அல்ல. கூட்டெழுத்துகள். அவற்றை உயிர் வரிசையில் இறுதியில் வைத்துவிடலாம் என்பது கொடுமுடியார் பரிந்துரை.

ஐ ஔ எழுத்துகளே போலி. அய், அவ் வடிவங்களே இயற்கை யானவை.

தமிழ் மொழியில் வரும் எல்லா ஐ ஔ எழுத்துகளையும் அய் அவ் எனப்பிறித்து எழுதலாம், எந்த வகையிலும் பொருள் மாறுபடுவதில்லை. திருவள்ளுவர் நமக்குத் துணை வருகிறார்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (169)

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும் (167)

கவ்வையால் கவ்விது காமம் அது இன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து (1144)

அவ்விய,அவ்வித்து என்பதோடு தவ்வை என்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது. தவ்வை என்பது போன்றே அவ்வை என்பதும் திருவள்ளுவர் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். "அகரத்திம்பர் யகரப்புள்ளியும் ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்" என்று மட்டும் நூற்பா கூறுகிறதேயன்றி ஔகாரம் பற்றி எதுவும் கூறவில்லை. அதனாற்றான் திருக்குறளில் அவ்காரம் மிஞ்சி நின்றது. உயிராயினும், உயிர்மெய்யாயினும் அவ்காரத்தில் எந்தச் சொல்லுமே யில்லை.

திருக்குறளில் அவ் மாறாதபோது அய் மட்டும் மாறியிருக்க முடியாது. அவர் அய்காரமாகத்தான் எழுதியிருப்பார்; எழுதியிருக்க வேண்டும்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

என்ற குறளைச் சுட்டிக்காட்டிய நன்னூல் விருத்தியுரையாசிரியர் இக்குறளில் ஐகாரக் குறுக்கம் பற்றிக் கூறும்போது, கைவேல் என்பதற்கு இலக்கணம் இல்லையென்று கூறுகிறார். கய்வேல் என்பதே சரியாக வடிவம் எனக் கருதுகிறார்.

இன்று **அய்யன் திருவள்ளுவர்** என்று எழுதுவதற்குப் பல தமிழர்களின் கைகள் நீள மறுக்கின்றன.

அந்த மாபெரும் கவிஞனை, சிந்தனையாளனை, வழிகாட்டியைக் முத்தமிழறிஞர் முனைவர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் என்று அழைத்துப் பேருவகை யடைந்தார். தமிழையே மூச்சாகக் கொண்ட பலருக்கு **அய்யன்** என்றெழுதக் கைவரவில்லை. நெஞ்சம் தயங்குகிறது.

இனி அத்தயக்கம் தேவையில்லை. வள்ளுவரே வழிகாட்டுகிறார். இனி அய்யன் திருவள்ளுவர் என்றெழுதிப் பெருமை பெறுவோமாக.

தமிழ் எழுத்துகள்—முற்காலம்

கி.மு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னம்

சிந்து வெளியில் காணப்படும் பட வடிவ எழுத்துகள் தமிழ் நாட்டில் பரவலாகக் காணப்பட்டன.

1. அரமாவதி ஆற்றுப்படுகையில் அளக்குடி சீதாராமன் அவர்களால் கண்டுபிடிப்பட்ட செப்பு வளையத்தில் சிந்துவெளி எழுத்து கொண்ட சொல் காணப்படுகிறது.

2. கீழ்வாலை ஆதிமனிதன் குகைகளில் சிந்துவெளி எழுத்துவடிவம் காணப்படுகிறது.

3. சென்னை கிண்டி அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் நூலகக் கட்டடத்தின் அடிமானம் தோண்டும்போது திரு. நடன. காசிநாதன் அவர்களின் உதவியோடு கொடுமுடியார் கண்டுபிடித்த ஈமப்பேழையில் இருந்த கலையோட்டில் இரண்டு படம் கொண்ட சிந்துவெளி எழுத்து ஒன்று கிடைத்தள்ளது.



4. தருமபுரி மாவட்டத்தின் மலைக் குகைகளில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் மதிவாணன் அவர்கள் பல சிந்துவெளிச் சொற்றொடர்களைக் கண்டு பிடித்துப் படித்துள்ளார்.

கி.மு. 500 அதற்குச் சற்று முன்னம்

தொல்காப்பியம் தோன்றியது கி.மு.500. தொல்காப்பியர் காலத்தில் மெய் எழுத்துகள் புள்ளி பெற்றன.எகரம், ஒகரம் ஆகியவையும் புள்ளி பெற்றன. அவர் காலத்திற்குச் சற்று முன்னர்வரை மெய் எழுத்துகள் புள்ளியில்லாமல் இருந்தன.

தற்போது பட்டிப்போருலு வகை எழுத்து என்று ஒரு வகை எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.அவற்றில் மெய் எழு த்துகளுக்குப் புள்ளியில்லை. அகர எழுத்துகள் தலையில் வலப்புறம் ஒரு சிறுகோடு பெற்றிருந்தன. அளக்குடி சீதாராமன் கண்டுபிடித்த ஊபஆன், வேள்ஈ சம்பன், குறவன் என்னும் எழுத்துப் பொறித்த மோதிரங்களைக் காண்போம்.


ஊபஆன்


வேள்ஈ சம்பன்


குறவன்

இதே போன்று கொடுமணல் அகழ்வாய்விலும் பானை ஓட்டில் காணப்படுகிறது ஒரு வரி.

இலங்கை நாட்டின் தென்முனை காலே நகரம். அங்குத் தமிழ்நாட்டின் வணிகக் குழுக்கள் பயன்படுத்திய நாணயங்கள் அண்மைக்காலத்தில் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காலகட்டத்தின் பின்னர் எழுத்துகளின் வடிவங்களில் ஒரு பெரிய மாற்றம் தோன்றியது. அகர எழுத்து தன்வடிவத்தில் வலதுபக்க மேற் கோட்டைஇழந்து விட்டுத் தன் இயல்பு நிலையை அடைந்தது. மெய் எழுத்தகள் தலைமேல் புள்ளி பெற்றுப் புதிய வடிவங்களைப் பெற்றன. தொல்காப்பியத்தில் இவ்வுண்மை பதிவு செய்யப்பட்டது.

தொல்காப்பியருக்குச் சற்று முன்னதாக தமிழ் எழுத்துகளில் ஒரு வியத்தகு சிறப்பு காணப்படுகிறது. தமிழ் எழுத்துகளின் ஊடே சிந்துவெளி எழுத்துகள் கலந்து எழுதப்படுகிறது.ஐராவதம் மகாதேவன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள எடக்கல் கல்வெட்டில் கடும்மி புத சேரகோ என்ற சொல்லில் **கோ** என்பது சிந்துவெளி எழுத்தாகும்.



இலங்கை வட்டுக்கோட்டையில் கிடைத்த இரு மொழி அச்சில் ஒரே சொல் இருமொழிகளில் காணப்படுகிறது. இதில் **கோவேந்த்** என்ற சொல் பிராமியில் உள்ளது. **கோ** என்றாலும் அரசன். **வேந்த்** என்றாலும் அரசன். இந்த உலோக அச்சு குயவரால் பயன்படுத்தப்படுவது. **கோ** எனில் குயவர் எனக்கொண்டால் **அரசவைக் குயவர்** என்றாகும். சிந்துவெளி வடிவத்தில் முதல் இரு எழுத்துகளும் ஒரேமாதிரி உள்ளன. எனவே சிந்து வெளி எழுத்துகளை **கோகோன்** என்றுவாசிக்கலாம் என்பது கொடுமுடியார் கருத்து.

இதில் வரும் **கோ, சேரகோ**என்பதில் வரும் **கோ** வடிவமும் ஒத்துப்போவதைப் பார்க்கலாம்.



தொல்காப்பியர் காலத்திலேயே இம்முறை வழக்கொழிந்துவிட்டதால் இதைப்பற்றிய குறிப்பு ஏதும் தொல்காப்பியத்தில் இல்லை.

கி.மு. 500 தொல்காப்பியர் காலம்

1. அகரம் உருவு திரியாத எழுத்தாக நிற்கிறது.
2. மெய்கள் புள்ளி பெறுகின்றன.
3. ஐகாரம், ஔகாரம் தனி எழுத்துகளாக உருவாகவில்லை. அய், அவ் என்றே எழுதப்பட்டன.
4. அகரம் தவிர்த்த ஏனைய உயிர்மெய் அனைத்தும் ஏதேனும் குறி பெற்று வடிவம் மாறி நின்றன.
5. தமிழ் எழுத்துகளைக் கொண்டே பாகதம் எழுதப்படுகிறது; எ, ஒ, எழுத்துகள் பாகத்தில் இருந்தன.
6. சங்கதம், எழுத்து மொழியாக உருவாகவில்லை.பேச்சு மொழியாகவே உலா வருகின்றது.

கி.மு. 250 அசோகர் காலம்

சங்கதம் படிப்படியாக முன்னேறுகிறது. பாகத மொழியின் எழுத்துகளை எடுத்துக்கொண்டு எழுத்து மொழியாக மாறுகிறது. சங்கத மொழியினர் அரசர்களின் ஆதரவைப் பெறுகின்றனர்.

சங்கத மொழியில் அ,ஆ,இ,ஈ, உ, ஊ மட்டுமே உண்டு; ஏகார, ஓகாரம், ஐகார ஔகாரம் அனைத்தும் கூட்டெழுத்துகள். பாகதத்தில் எகர, ஒகரம் உண்டு.

சங்கத மொழி, பாகத எழுத்துகளை எடுத்துக் கொண்டது மட்டுமின்றி சங்கத எழுத்துகளிலேயே பாகதத்தையும் எழுத ஏற்பாடு செய்தது. இயல்பாக ஒலிக்கக் கூடிய வல்லின எழுத்துகளுக்கு வர்க்க எழுத்துகள் உருவாக்கி உலவவிட்டனர். அசோகர் ஆட்சி தமிழ் நாட்டிற்குள் வராததால், இவ்வெழுத்துகள் பாகதத்தோடு நின்றுவிட்டன.

கி.மு.100

பவுத்த சமண முனிவர்கள் வடக்கிலிருந்து தென்னகம் வருகின்றனர். சங்கதம் இன்னும் பேச்சு மொழி ஆகவில்லை. பொது மக்கள் பார்வையில் படாமல், காதில் விழாமல் மிகுந்த விழிப்போடு பாதுகாத்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் அவர்கள் உலவவிட்ட சங்கத மயமாக்கப்பட்ட பாகத எழுத்துகள் தமிழ்நாட்டில் நுழைகின்றன.

தமிழ் நாட்டில் ஐ, ஔ எழுத்துகளைப் புகுத்துவதற்காகத் தொல்காப்பியத்தில் போலி இலக்கணம் புகுத்தப்படுகிறது. தெளிவான அறிவு இல்லாதவர்களால் இது நுழைக்கப்பட்டதென்பதை எளிதில் அறியலாம். **அய்** எழுத்தை ஐ என எழுதலாம் எனக் கூறியவர்கள் **அவ்** எழுத்தை ஔ என மாற்றம் வேண்டுமெனக் கூறவில்லை. ஐ, ஔ மட்டும் புகுந்ததேயன்றி **வர்க்க எழுத்துகள்** புகவில்லை.

கி.மு. 31 திருவள்ளுவர் காலம்

திருவள்ளுவர் போலி இலக்கணத்தைப் பொருட்படுத்தவில்லை. திருக்குறள் முழுவதும் அய், அவ் என்றே எழுதினார்.

கி.பி. 200

தொல்காப்பியப் போலி இலக்கணம் படிப்படியாக ஆட்சி பெறுகிறது. திருவள்ளுவருக்குப் பின் ஏடெழுதுவோர் தொல்காப்பியப் போலி இலக்கணத்தைப் பின்பற்றி **அய்** வடிவ எழுத்துகளை எல்லாம் ஐ வடிவில் மாற்றுகின்றனர். எனினும் எந்த வகையிலும் பொருள் மாற்றம் இல்லை.

போலி இலக்கணத்தில் அவ் எழுத்துகளை மாற்ற வேண்டுமென்று கூறாததால், **அவ்விய நெஞ்சம், அவ்வியான், அவ்வித்து, கவ்வை, தவ்வை** போன்ற சொற்கள் மாறாமல் இன்று வரை நமக்குக் கிடைக்கின்றன.

கி.பி.275

சங்கத மொழியின் முதல் கல்வெட்டு குசராத் மாநிலத்தில் கிர்நார் பகுதியில் கிடைக்கிறது பாரத தேசத்தின் அறிவாளர் மொழியாகச் சங்கதம் உலா வருகிறது. தமிழ்க் கல்வெட்டுகள் கிமு **500** அளவிலேயே தமிழகத்தில் கிடைக்கின்றன.

கி.பி.300

பல்லவர்கள் தொடக்கத்தில் பாகத மொழியில் செப்பேடு வெளியிடுகின்றனர். பின்னர் படிப்படியாக சங்கத மொழியை அறிமுகப்படுத்து கின்றனர். சங்கத மொழியை ஏற்ற தமிழ் மக்கள் அதன் எழுத்துகளை ஏற்கவில்லை. தமிழ் எழுத்துகளில் சிற்சில மாற்றங்கள் செய்து கிரந்தம் என்ற புதிய எழுத்து வகையை உருவாக்கிக் கொண்டனர். இவ்வெழுத்துகள் இன்று வரை ஆட்சி பெற்றுள்ளன.

இதே காலகட்டத்தில் தமிழ் எழுத்துகள் தொண்டை மண்டலம், பண்டி மண்டலம், கொங்கு மண்டலம், சேர மண்டலம் ஆகிய பகுதிகளில் வட்டெழுத்தாகத் திரிகின்றன.

கி.பி.1000

பேரரசன் இராசராசன் காலத்தில், வட்டெழுத்துகள் மீண்டும் கோல் எழுத்துகளாக மாற்றப்படுகின்றன. கேரளம் மட்டும் திரும்பவில்லை. மலையாள மொழி வட்டெழுத்தை நிறுத்திக் கொண்டு தமதாக்கிக் கொண்டது.

கி.பி. 1577

தமிழில் முதல் அச்சுப்பொத்தகம்

தம்பிரான் வணக்கம்

வெளிவருகிறது.